

தியாகி இமானுவேல் சேகரன் நினைவு தினத்தை முன்னிட்டு திருச்சி தெற்கு மாவட்ட தி.மு.க. சார்பில் மாவட்ட அலுவலகத்தில் திருச்சி தெற்கு மாவட்ட கழக செயலாளரும் தமிழக பள்ளிக்கல்வித்துறை அமைச்சருமான அன்பில் மகேஸ் பொய்யாமொழி தலைமையில் இமானுவேல் சேகரன் உருவபடத்திற்க்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டது. நிகழ்வில் திருச்சி மாநகர செயலாளர் மதிவாணன் மற்றும் மாவட்ட மாநகர நிர்வாகிகள், சேகரன் வண்ணை அரங்கநாதன், கோவிந்தராஜன், லீலாவேலு, மூக்கன், நீலமேகம், ஜெகதீசன், சிந்துஜா, தனசேகரன் பழனியாண்டி, முத்தமிழ்கருணாநிதி, மாவட்ட, ஒன்றிய, நகர, பகுதி, பேரூர் கழக நிர்வாகிகள், அணிகளின் அமைப்பாளர்கள் கலந்து கொண்டனர்.



விழுப்புரம் தெற்கு மற்றும் வடக்கு மாவட்ட ஒன்றிய, நகர, பேரூர் அமைப்பாளர் மற்றும் துணை அமைப்பாளர்களுக்கான நேர்காணல் விழுப்புரம் கலைஞர் அறிவாலயம் தளபதி அரங்கில் நடைபெற்றது. கழகத் துணைப் பொதுச்செயலாளர், உயர்கல்வித்துறை அமைச்சர் முனைவர் க.பொன்முடி நேர்காணலுக்கு வந்தவர்களுடன் குழு புகைப்படம் எடுத்துக் கொண்டு வாழ்த்துக்களை தெரிவித்துக் கொண்டார். அமைச்சர் கே.எஸ்.மஸ்தான், நா.புகழேந்தி எம்.எல்.ஏ, மாநில இளைஞர் அணி துணை செயலாளர்கள் ப. அப்துல் மாலிக் , எஸ்.ஜோயல், ஜி.பி.இராஜா, ஈரோடு பிரகாஷ், இளையராஜா, பிரபு, சீனுவாசன், இரா. ஜனகராஜ், செ. புஷ்ப ராஜ் மற்றும் பலர் கலந்து கொண்டனர். மாநில தீர்மானக்குழு உறுப்பினர் செஞ்சி சிவா, மாவட்ட துணைச் செயலாளர் தயா. இளந்திரையன், மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர்கள் செ. தினகரன், கண்ணன் ஆனந்த், துணை அமைப்பாளர்கள் டி கே. பி. இரமேஷ், ராயல் அன்பு, T. D. J இராஜ வேல், எஸ். பாலாஜி, ஏ. சி. கே. பிரேம், கலைவாணன், தேவேந்திரன், உதயகுமார், பாபு, அண்ணாமலை, விஜயகுமார் உள்ளிட்ட பலர் உடனிருந்தனர்.

# ஜி 20 உச்சி மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள்!

**புதுடெல்லி, செப்.12-**

**ஜி20 உச்சி மாநாட்டில் பல்வேறு விவகாரங்கள் தொடர்பாக தீர்மானங்கள் நிறைவேற்றப் பட்டன. அவை வருமாறு :-**

ஜி20 அமைப்பானது அனைத்து வகையான தீவிரவாதத்தையும், தீவிரவாத அமைப்புகளுக்கு பாதுகாப்பான புகலிடம் வழங்குபவர்கள், நிதி உதவி செய்பவர்களையும் கடுமையாக கண்டிக்கிறது. மேலும் தீவிரவாதத்தை ஒழிக்க, நிதி மற்றும் அரசியல் ரீதியாக சர்வதேச ஒத்துழைப்பின் செயல்திறனை அதிகரிக்கும் முயற்சிகளை வலுப்படுத்தவும் அழைப்பு விடுக்கிறது. அணு ஆயுதம் பயன்படுத்துவதையோ, அணு ஆயுத தாக்குதல் தொடர்பாக மிரட்டுவதையோ ஏற்க முடியாது

உக்ரைன் - ரஷ்யா போருக்கு பேச்சுவார்த்தை மூலம் தீர்வு காண நடவடிக்கை எடுக்க வேண்டும்

கிரிப்டோ கரன்சிகளை ஒழுங்குபடுத்துவதற்கான உலகளாவிய கட்டமைப்பை அனைத்து நாடுகளும் உடனடியாக செயல்படுத்துவது.

2030க்குள் பசுமை இல்ல வாயுக்கள் வெளியிடுதல் 43 சதவீதம் அளவுக்கு குறைக்க கவனம் செலுத்த வேண்டும்.

செயற்கை நுண்ணறிவுக்கான சர்வதேச விதிகள் வகுக்கவும், பாதுகாப்பான, நம்பகமான, பொறுப்புணர்வு மற்றும் அனைவரையும் உள்ளடக்கிய டிஜிட்டல் பொது உள்கட்டமைப்பு (டிபிஐ) ஏற்படுத்தவும் சர்வதேச ஒத்துழைப்பை ஊக்குவிக்க வேண்டும்.

பாதிக்கப்படக்கூடிய சூழ்நிலைகளில் உள்ளவர்கள் உட்பட அனைவரையும் உள்ளடக்கிய, சமத்துவமான, உயர்தர கல்வி மற்றும் திறன் பயிற்சியை உறுதிப்படுத்த வேண்டும். கற்பவர்கள் அனைவரும் டிஜிட்டல் தொழில்நுட்பங்களைப் பயன்படுத்துவதற்கான வசதிகளை பெற வேண்டும். உயர்தர தொழில்நுட்பம், தொழிற்கல்வி மற்றும் பயிற்சிக்கான அணுகலை விரிவுபடுத்த வேண்டும்.

பொருளாதார வளர்ச்சிக்கான முடிவுகள் எடுக்கும் இடத்தில் பெண்களுக்கு முக்கியத்துவம் தரப்பட வேண்டும். பாலின இடைவெளியைக் குறைத்து சமமான வாய்ப்புகளை வழங்கி பெண்களை ஊக்குவிக்க வேண்டும்.

பொருளாதார வளர்ச்சியை மேம்படுத்தவும், ஏற்றத்தாழ்வுகளைக் குறைக்கவும், மேக்ரோ பொருளாதாரம் மற்றும் நிதி ஸ்திரத்தன்மையைப் பேணுவதற்கும் நன்கு அளவீடு செய்யப்பட்ட பணவியல், நிதி, நிதி மற்றும் கட்டமைப்புக் கொள்கைகளின் அவசியத்தை நாங்கள் மீண்டும் வலியுறுத்துகிறோம்.

பாரீஸ் பருவநிலை ஒப்பந்தத்தின்படி, உலக வெப்பமயமாதல் குறைப்பு இலக்குகளை அடைவதற்கான உலகளாவிய நடவடிக்கைகள் போதுமானதாக இல்லை. இதில் அனைத்து நாடுகளும் தனித்தனியாக தீவிர கவனம் செலுத்த வேண்டும்.

ஊழலை ஜி20 அமைப்பு ஒருபோதும் சகித்துக் கொள்ளாது. ஊழலை ஒழிக்க சட்ட ரீதியான சர்வதேச ஒத்துழைப்பை வலுப்படுத்த வேண்டும்.

இவ்வாறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

# பொத்தனூர் அ.தி.மு.க., பா.ஜ.க. நிர்வாகிகள் 50 பேர் கழகத்தில் இணைந்தனர்!

## மாவட்டச் செயலாளர் எஸ்.எம்.மதுரா செந்தில் முன்னிலையில்

நாமக்கல் செப். 12

நாமக்கல் மேற்கு மாவட்டம் கபிலர்மலை ஒன்றியம் பொத்தனூர் பேரூர் அ.தி.மு.க. மற்றும் பா.ஜ.கவை சேர்ந்த நிர்வாகிகள் பொத்தனூர் பேரூர் திமுக செயலாளர் கருணாநிதி ஏற்பாட்டில் நாமக்கல் மேற்கு மாவட்டக் கழகச் செயலாளர் எஸ்.எம்.மதுரா செந்தில் முன்னிலையில் கழகத்தில் இணைந்தனர்.

கபிலர்மலை அ.தி.மு.க. ஒன்றிய மாணவரணி இணைச் செயலாளர் பிரபாகரன் தலைமையில் பொத்தனூர் இளைஞர் பாசறை மற்றும் அம்மா பேரவை சேர்ந்த நிர்வாகிகள் மற்றும் பாஜகவை சேர்ந்த நிர்வாகிகள் பிரகாஷ், ஹரிஷ், சூர்யா, பாண்டி, கிஷோர், ராஜாராம், உசேன், சங்கர் கார்த்தி, தினேஷ், திருநாவுக்கரசு, பாண்டி, ராஜகணபதி, சவுந்தர்ராஜன், துரைராஜ், மணிகண்டன், மோகன்ராஜ், குமார், வேல் முருகன் உள்ளிட்ட 25க்கும் மேற்பட்ட இளைஞர்கள் தி.மு.க.வில் இணைந்தனர்.


30 - ஆம் ஆண்டு நினைவு அஞ்சலி

12.09.2023



க.வீரைய்யா Ex,MP.

தந்தை பெரியாரிடம் பயின்று
அண்ணாவின் லட்சிய தீபத்தை தாங்கி பிடித்து
கலைஞரோடு ஒன்றாக பயணித்து
தளபதியின் உழைப்புக்கு உயர்வு தந்து
கழக வழியில் தடம் பிறழாமல்
எங்களுக்கு வழிகாட்டிய கலங்கரை விளக்கே
காலமெல்லாம் உங்கள் நெறியில்....

தலைவர் தளபதியின்
தலைமையில்
என்றைக்கும் இயக்கம் காப்போம் உங்கள் வழியில்...

மு.க.இராமகிருஷ்ணன்
ஒன்றிய கழகச் செயலாளர்,மாவட்ட கவுன்சிலர்

Dr.மு.க.முத்துக்கருப்பன் M.B.B.S., DMRD., MDRD.,
மாவட்ட மருத்துவரணி அமைப்பாளர்

க.வீரைய்யா Ex,MP. குடும்பத்தினர்கள்
புதுக்கோட்டை


## அரியலூர் மாவட்டம்

# கரைவெட்டி பறவைகள் சரணாலயத்தில் ஆய்வு!

## அமைச்சர்கள் மா.மதிவேந்தன் - சா.சி.சிவசங்கர் மேற்கொண்டனர்!

அரியலூர்,செப், 12-

அரியலூர் மாவட்டம், கரைவெட்டி பறவைகள் சரணாலயம் மற்றும் மேலகருப்பூர் ஊராட்சியில் அரியலூர் வனச்சரக புதிய நாற்றாங்காலினை வனத்துறை அமைச்சர் டாக்டர் மா.மதிவேந்தன் மற்றும் தமிழ்நாடு அரசு போக்குவரத்துத் துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் ஆகியோர் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்கள்.

இந்த ஆய்வில் மாவட்ட ஆட்சித்தலைவர் ஜா.ஆனி மேரி ஸ்வர்ணா, அரியலூர் சட்டமன்ற உறுப்பினர் கு.சின்னப்பா ஆகியோர் கலந்துகொண்டனர்.

அரியலூர் மாவட்டத்தில் உள்ள கரைவெட்டி பறவைகள் சரணாலயம் புலம்பெயரும் நீர்ப்பறவைகளுக்கான, தமிழ்நாட்டிலுள்ள மிக முக்கியமான நன்னீர் ஏரிகளுள் ஒன்றாக விளங்குகிறது. மாநிலத்தின் பெரிய ஏரிகளுள் இதுவும் ஒன்றாக திகழ்கிறது. இச்சிறப்பு மிக்க அரியலூர் வனக்கோட்டத்தின் கட்டுப்பாட்டில் உள்ள கரைவெட்டி பறவைகள் சரணாலயம் மற்றும் அரியலூர் வனச்சரகம், அரியலூர் வனக்கோட்டத்தில் புதிய நாற்றாங்கால் அமைக்கப்பட்டுள்ளதை இன்றையதினம் வனத்துறை அமைச்சர் அவர்களுடன் தமிழ்நாடு அரசு போக்குவரத்துத் துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் பார்வையிட்டு ஆய்வு செய்தார்கள்.

முன்னதாக அரியலூர் மாவட்டம், வாரணவாசி கிராமத்தில் உள்ள புதை உயிரிப்படிவ அருங்காட்சியகத்தினை வனத்துறை அமைச்சர் டாக்டர் மா. மதிவேந்தன், தமிழ்நாடு அரசு போக்குவரத்துத் துறை அமைச்சர் சா. சி.சிவசங்கர் ஆகியோர் பார்வையிட்டு ஆய்வு செய்தார்கள்.

இந்த ஆய்வில் மாவட்ட வருவாய் அலுவலர் மரு.ம. ச.கலைவாணி, முதன்மை தலைமை வனக்காவலர் சென்னை சுபரத் மொஹபத்ரா தலைமை வனக்காவலர் திருச்சி சதிஷ் வருவாய் கோட்டாட்சியர் ராமகிருஷ்ணன், மாவட்ட வன அலுவலர் இளங்கோவன், வனச்சரக அலுவலர் முத்துமணி, மாவட்ட துணை செயலாளர் சி.சந்திரசேக ரன், ஒன்றிய செயலாளர்கள் இரா.கென்னடி, ரெ. அசோகசக்ரவர்த்தி, மாவட்ட பொறியாளர் அணி அமைப்பாளர் கே.சி.ஞாயிகதிரவன், மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் எஸ்.ஆர். முருகேசன், மாவட்ட பிரதிநிதிகள் மு.முத்தமிழ் செல்வன், ஆர். ஜி. மணிவேல், நெடுஞ்செழியன்,

மாவட்ட கலை இலக்கிய பகுத்தறிவு பேரவை துணை தலைவர் மு.பழனிசாமி, மாவட்ட விவசாய அணி துணைத் தலைவர் ரவி, ஒன்றிய துணை செயலாளர்கள் க.ரவி, மனோஜ், ஒன்றிய பொருளாளர் ஆனஸ்ட் அம்பிகாபதி, ஒன்றிய தகவல் தொழில்நுட்ப அமைப்பாளர் டி.எம். அருண், ஒன்றிய இளைஞரணி துணை அமைப்பாளர் ஆசை.அன்பு, எல். கே.அருண், மற்றும் அரசு அலுவலர்கள் உள்ளிட்ட பலர் உடன் இருந்தனர்.



முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க, உயர்கல்வித்துறை அமைச்சர் முனைவர் க.பொன்முடி அவர்களின் வழிகாட்டுதலின்படி, விக்கிரவாண்டி சட்டமன்ற தொகுதி, விக்கிரவாண்டி ஊராட்சி ஒன்றியம், சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்டம் 2022 – 2023 நிதியின் மூலமாக ரூ.7.0 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்ட புதிய நாடக மேடையை விக்கிரவாண்டி சட்டமன்ற உறுப்பினர் – விழுப்புரம் தெற்கு மாவட்டச் செயலாளர் நா. புகழேந்தி எம்.எல்.ஏ. திறந்து வைத்தார். மாவட்ட வருவாய் அலுவலர் பரமேஸ்வரி, கோட்டாட்சியர் பிரவீனா குமாரி, மாவட்ட துணை செயலாளர் தயா. இளந்திரையன், ஒன்றிய குழு தலைவர் சங்கிதாஅரசி ரவிதுரை, பேரூராட்சி தலைவர் அப்துல் சலாம், ஒன்றிய செயலாளர்கள் ஜெய.ரவிதுரை, வேம்பி ரவி, ஜெ.ஜெயபால், ஒன்றிய குழு துணை தலைவர் ஜீவிதா ரவி, பேரூராட்சி துணை தலைவர் ச.பாலாஜி, வட்டார வளர்ச்சி அலுவலர்கள் சுமதி, முபாரக் அலி, மாவட்ட கவுன்சிலர் மீனா வெங்கடேசன், ஒன்றிய கவுன்சிலர் அன்பரசி நீதி கோபிநாத், ஊராட்சி மன்ற தலைவர் செல்வி, கிளை செயலாளர்கள் நீதி என்கிற கோபிநாத், குணசேகர், நாவப்பன், பிரபு மற்றும் அரசு அதிகாரிகள், கழக நிர்வாகிகள் உடனிருந்தனர்.

# திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

**புதுக்கோட்டை க. வீரைய்யா**
**செப்டம்பர் 12 (1993)**



புதுக்கோட்டை மாவட்டத்தின் கழகத் தூண்களில் ஒருவர்.

நாடாளுமன்ற உறுப்பினராகப் பணியாற்றியவர்.

தி.மு.கழகத்தின் சொத்து பாதுகாப்பு உறுப்பினராகவும், தலைமை நிர்வாகக்குழு உறுப்பினராகவும் பணியாற்றியவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.